மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் முற்றாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள் ஓரளவும் குடித்தொகை மதிப்பு மேற்கொள்ளப்பட்டன. எனவே இந்த மாவட்டங்களின் 2012 இல் நடைபெற்ற குடிக்கணக்கின் இறுதி முடிவுகள் இன்னும் முழுமையாக வெளியிடப்படவில்லை. மொத்த மக்கள் தொகை பற்றிய தொடக்க (preliminary) முடிவுகள் வெளிவந்துள்ளன. அதன் அடிப்படையில் இலங்கையின் மொத்த குடித்தொகை மதிப்பு மற்றும் ஆண்டு வளர்ச்சி கீழேயுள்ள அட்டவணை 1 காட்டுகிறது.

அட்டவணை 1

### இலங்கை குடித்தொகை மதிப்பு மற்றும் ஆண்டு வளர்ச்சி விழுக்காடு (1871 - 2012)

| ஆண்டு | குடித் தொகை | நிகர குடித் தொகை வளர்ச்சி | | ஆண்டு வளர்ச்சி விழுக்காடு |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | விழுக்காடு | |
| 1871 மார்ச் 27 | 2,400,380 | - | - | - |
| 1881 பெப்ரவரி 17 | 2,759,738 | 359,358 | 15.0 | 1.4 |
| 1891 பெப்ரவரி 26 | 3,007,789 | 248,051 | 9.0 | 0.9 |
| 1901 மார்ச் 10 | 3,565,954 | 558,165 | 18.6 | 1.7 |
| 1911 மார்ச் 10 | 4,106,350 | 540,396 | 15.2 | 1.4 |
| 1921 மார்ச் 18 | 4,498,605 | 392,255 | 9.6 | 0.9 |
| 1931 பெப்ரவரி 26 | 5,306,871 | 808,266 | 18.0 | 1.7 |
| 1946 மார்ச் 16 | 6,657,389 | 1,350,468 | 25.4 | 1.5 |
| 1953 மார்ச் | 8,097,895 | 1,440,556 | 21.6 | 2.8 |
| 1963 யூலை 08 | 10,582,064 | 2,484,169 | 30.7 | 2.6 |
| 1971 ஒக்தோபர் 09 | 12,689,897 | 2,107,833 | 19.9 | 2.2 |
| 1981 மார்ச் 17 | 14,846,750 | 2,156,853 | 17.0 | 1.7 |
| 2001 யூலை 17 | 18,797,257 | 3,950,507 | 26.6 | 1.2 |
| 2012 மார்ச் 20 | 20,277,597 | 1,480,340 | 7.9 | 0.7 |

கீழே உள்ள அட்டவணை இலங்கை இன அடிப்படையில் குடித்தொகை மதிப்பைக் காட்டுகிறது. மேலே குறிப்பிட்டது போல 1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாடு தழுவிய குடித்தொகை எடுக்கப்படவில்லை. பெப்ரவரி - மார்ச் 2012 இல் எடுத்த குடித்தொகை மதிப்பு இன்னும் வெளிவரவில்லை. 1901 இல் 26.69 விழுக்காடாக இருந்த தமிழர் 1981 இல் 18.22 விழுக்காடாகத் தேய்ந்து போனது கவனிக்கத்தக்கது. மொத்தம் 525,000 மலையகத் தமிழர் சிறீமா - சாத்திரி உடன்பாட்டின் கீழ் நாடு கடத்தப்பட்டது இந்த தேய்வுக்கு முக்கிய காரணமாகும். 2012 குடித்தொகை மதிப்பு வரும் போது புலப்பெயர்வு காரணமாக இலங்கைத் தமிழரது விழுக்காடு 2 அல்லது 3 விழுக்காடு குறைந்து காணப்படும் என எதிர்பார்க்கலாம்.

அட்டவணை 2

### இலங்கை இனவாரி குடித்தொகை மதிப்பு (1881 - 1989)